


**29. 10. 2025**

**தலைப்பு செய்திகள்**

- **உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை, வளத்திற்கு இந்தியா - ஜப்பான்** நாடுகளிடையே வலுவான நட்புறவின் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
- **ஜவுளித்துறையில், வர்த்தக தடைகளை களைய மத்தியஅரசு** உரிய தீர்வுகளை கண்டறியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதா கிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- **தென்காசி மாவட்டத்தில் 432 கோடி ரூபாய் மதிப்பிலான** திட்டப்பணிகளை தொடங்கி வைத்ததுடன், 83 புதிய திட்டங்களுக்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.
- **வைகை அணையிலிருந்து** 58 கிராம திட்ட கால்வாய்க்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.
- **கேன்பராவில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான** முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பிரதமர் – ஜப்பான்**

உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை, வளம், போன்றவற்றிற்கு இந்தியா - ஜப்பான் நாடுகளிடையிலான வலுவான நட்புறவின் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

ஜப்பான் பிரதமர் திருமதி. செனாய் தக்காய்ச்சியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த பிரதமர், பொருளாதார பாதுகாப்பு, ராணுவ ஒத்துழைப்பு, திறன் பரிமாற்றங்களுக்கு உரிய முக்கியத்துவத்தை இருநாடுகளும் வழங்கி வருவதை அவருடன் பகிர்ந்து கொண்டதாக தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாதையில் இருநாடுகளிடையே ஒருங்கிணைந்த நட்புறவும், ஒத்துழைப்பும் தேவை என்பதை இருவரும் உணர்ந்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**மும்பையில் நடைபெறும் இந்திய கடல்சார் தலைவர்கள்** மாநாட்டில் பிரதமர் இன்றுமாலை பங்கேற்கிறார்.

துறைமுக உள்கட்டமைப்பு, பசுமை ஆற்றல், கப்பல் கட்டுமானம் உள்ளிட்டவற்றில் புதுமை, தொழில்நுட்பம், நிலைத்தன்மை தொடர்பான விவாதங்கள் இந்த மாநாட்டில் இடம்பெறுகின்றன.

❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு** ஹரியானா மாநிலம் அம்பாலா விமானப்படை தளத்தில் ரஃபேல் போர் விமானத்தில் இன்று பயணித்தார்.

25 நிமிடங்களுக்கு இந்த பயணம் அமைந்தது.

முன்னதாக விமானப்படைதளத்திற்கு வந்த குடியரசு தலைவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முப்படைகளின் தலைமை தளபதியான குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அசாம் மாநிலம் தேஸ்பூர் விமான படைதளத்தில் சுகோய் 30 ரக போர் விமானத்தில் பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

## குடியரசு துணைத்தலைவர்

**ஜவுளித்துறை, வர்த்தக தடைகளை களைய** பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு உரிய தீர்வுகளை கண்டறியும என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், நல்லனவற்றையே குறிக்கோளாக கொண்டு பிரதமர் செயலாற்றுவதாக எடுத்துரைத்தார்.

உலகமே பிரதமரின் பேச்சை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாழ்வின் முன்னேற்றத்திற்கு உழைப்பின் அவசியத்தை எடுத்துரைத்த அவர், இப்பாதையில் நேர்மையும், நீதியும் நிலைநாட்டப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

சமூகத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு நாட்டுமக்கள் செயலாற்ற வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

குடியரசு துணைத்தலைவர் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளை இன்றுமாலை மேற்கொள்கிறார்.

அவரின் வருகையை ஒட்டி மதுரை, திருப்பூர் மாவட்டங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

## மன்சுக் மாண்டவியா

**சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது** பிறந்தநாள் நாளை மறுநாள் கொண்டாடப்படவுள்ள நிலையில் மத்திய இளைஞர்நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று மாலை சிறப்புரையாற்றுகிறார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் இதில் பங்கேற்கிறார்.

நாட்டின் முதல் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சரான பட்டேலை கவுரவிக்கும் வகையில் இந்நிகழ்வு இடம்பெறுகிறது.

**சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது** பிறந்தநாளை ஒட்டி மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சார்பில் நாளை மறுநாள் முதல் அடுத்த மாதம் 25-ம் தேதிவரை ஒற்றுமை யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில் நடைபெறும் ஒற்றுமை யாத்திரை குறித்து நிகழ்ச்சி உதவியாளர் திரு.மகேஷ்வரன் எடுத்துரைத்தார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

**தமிழ்நாட்டில் அனைவருக்கும் அரசின்** நலத்திட்டங்கள் சென்றடைவதை நோக்கமாக கொண்டு மாநில அரசு செயலாற்றுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டத்தில் 141 கோடி ரூபாய் மதிப்பிலான 117 முடிவுற்ற திட்டப்பணிகளை இன்று துவக்கி வைத்ததுடன், 291 கோடி ரூபாய் மதிப்பிலான 83 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இரண்டரை லட்சம் பயனாளிகளுக்கு 587 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு ஒருங்கிணைந்த சேவை மையங்கள், கடையநல்லூர் சங்கரன் கோவில் கண்மாய்களை சீரமைத்தல் உள்ளிட்ட மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் குறித்த் அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிட்டார்.

.. **வாய்ஸ்** ..

முன்னதாக கழுநீர்குளம் பகுதியில் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை அவர் ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖

## மத்திய குழு

**நெல் ஈரப்பதம் தொடர்பாக தமிழகத்தின்** பல்வேறு மாவட்டங்களில் 3 குழுக்களாக ஆய்வு செய்த மத்திய குழுவினர் தங்களது ஆய்வை முடித்துக்கொண்டு புதுதில்லி திரும்பியுள்ளனர்.

திருச்சி, தஞ்சை, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட இக்குழுவினர் நெல்லின் மாதிரிகளை சேகரித்து சென்று உணவு ஆய்வகத்தில் அதனை சமர்ப்பித்துள்ளனர்.

மாநிலத்தின் பல்வேறு பகுதியில் உள்ள விவசாய சங்கத்தினரும் இக்குழுவினரை சந்தித்து நெல் ஈரப்பதத்திற்கான தளர்வை நிபந்தனையின்றி அறிவிப்பதோடு, நெல் கொள்முதலுக்கான கொள்கையையும் வெளியிட கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே நடப்பு குறுவை பருவத்தில் 11 லட்சத்து 21 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, ஒருலட்சத்து 45 ஆயிரம் விவசாயிகளுக்கு 2 ஆயிரத்து 709 கோடி ரூபாய் செலுத்தப்பட்டிருப்பதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

மாநிலம் முழுவதும் ஆயிரத்து 872 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், துரிதமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு நகர்வுகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களிலிருந்து மட்டும் 30 ஆயிரம் டன்னுக்கு மேற்பட்ட நெல் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. சக்கரபாணி குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

## வாக்காளர் பட்டியல்

**தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு** திருத்தம் தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையம் இன்று ஆலோசனை மேற்கொள்கிறது.

தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் வரும் 4-ஆம் தேதி தொடங்குகின்றன.

❖❖❖❖❖❖❖

இருவரி

**காஞ்சிபுரம் மாவட்டத்தில்** உத்திரமேரூர் வட்டம் சித்தேரியில் நீர்நிலைகளில் மீன் குஞ்சு விரலிகள் இருப்பு வைக்கும் நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கலைச்செல்வி மோகன் பங்கேற்றார்.

**பெரம்பலூர், திருப்பத்தூர், நாமக்கல் ஆகிய** மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நாளைமறுநாள் நடைபெறவுள்ளதாக அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**வைகை அணை**

**வைகை அணையிலிருந்து** 58 கிராம திட்ட கால்வாய்க்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மதுரை உசிலம்பட்டி, திண்டுக்கல் நிலக்கோட்டை பகுதிகளுக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 284 ஏக்கர் நிலங்கள் பாசனவசதிபெறும்.

❖❖❖❖❖❖❖

**தேனி**

தேனி சண்முகாநதி அணை நீர்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**நாகை**

**மோந்தா புயல் கரையை கடந்ததை அடுத்து** நாகை மாவட்ட மீனவர்கள் 10 நாட்களுக்கு பிறகு இன்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

…வாய்ஸ்…

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**கேன்பராவில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதலாவது** 20-20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச தீர்மானித்தது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖